IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE NO.I, HOSUR

**OS NO. 111/2014**

Deposition witness for Plaintiffs/Defendant/Respondent

Solemnly affirmed and sworns by Thiru.S.Chandru Grade III Bench Clerk on 01.07.2022 accordance with the provisions with the Act of 1873.

| | |
|---|---|
| Name : Ramachandiran | Father's Name : Kullappa |
| Village : | Taluk : |
| Caste : | Calling : |
| Religion: | Age : 69 |

வா.சா. 1

## 1 ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணையின் தொடர்ச்சி :

எனக்கு தற்பொழுது வயது 69 என்றால் சரிதான். ஆகவே என்னுடைய சத்திய பிரமாண வாக்குமூலத்தில் என்னுடைய வயது 55 என்று தவறாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். எனவே என்னுடைய சத்திய பிரமாண வாக்குமூலத்தில் உள்ள விவரங்களை நான் கூறி தயார் செய்யவில்லை என்றால் சரியல்ல. வழக்கு சொத்திற்குரிய புல எண் 54 ஆகும். இவ்வழக்கு பட்டிகை சொத்தில் தற்போது வீடு உள்ளது. வழக்கு பட்டிகை சொத்தில் ஒரு பகுதியில்தான் வீடு உள்ளது. வீட்டின் விஸ்தீரணமானது 500 சதுரடி ஆகும். தற்பொழுது மேற்படி வீட்டில் 1 ம் பிரதிவாதிதான் வசித்து வருகிறார். 1950 ம் ஆண்டு என்னுடைய தந்தை வழக்கு பட்டிகை சொத்தில் வீட்டைக் கட்டினார். 1 ம் பிரதிவாதிதான் மேற்படி வீட்டினை 20 வருடங்களுக்கு முன்புதான் கட்டினார் என்றால் சரியல்ல. 1 ம் பிரதிவாதி கடந்த 20 வருடங்களாக மேற்படி வீட்டில் வசித்து வருகிறார். நான் 1980 ம் வருடம் ஓசூரில் குடியேரினேன். நான் ஓசூருக்கு குடியேரிய பின்பு என்னுடைய தந்தை என்னுடன்தான் வசித்து வந்தார்

என்றால் சரியல்ல, என்னுடைய பெற்றோர் ஊரில்தான் இருந்தனர். ஆகவே என்னுடைய சத்திய பிரமாண வாக்குமூலத்தில் என்னுடைய தந்தை என்னுடன்தான் இருந்தார் என்றும் அவர் அவ்வபோது என்னுடைய தாயாரை சென்று பார்த்து வருவார் என்று தவறாக குறிப்பிட்டுள்ளது என்றால் சரியல்ல. நான் வாரத்திற்கு ஒருமுறை என்னுடைய தாயாரை சென்று பார்த்துவருவேன். என்னுடைய தாயார் வசித்து வந்த வீட்டின் கதவு எண் எனக்கு தெரியாது. ஆனால் அது ஹரிஜன் காலனியில் உள்ளது. இந்த வீடு எங்களுக்கு அரசாங்கத்தால் வழங்கப்பட்டது என்றால் சரிதான். பொதுவாக வீடு இல்லாதவர்க்குதான் அரசாங்கத்தில் வீடு வழங்கப்படும் என்றால் சரிதான், எனக்கு அந்த சமயத்தில் வீடு இல்லாததால் வழங்கப்பட்டது. நான் என்னுடைய பெற்றோரை பராமரித்து வந்தேன். என்னுடைய தாயார் வயதானவருக்கு வழங்கப்படும் ஓய்வூதியத்தை பெற்று வருவதாக என்னுடைய சத்திய பிரமாண வாக்குமூலத்திலும் என்னுடைய முதல் விசாரணை சாட்சியத்திலும் குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். பராமரிப்பதற்கு ஆட்கள் இருந்தால் வயதானவருக்கு ஓய்வூதியம் வழங்கப்படமாட்டாது என்றால் சரிதான், என்னுடைய தந்தை உயிருடன் இருந்தவரை என்னுடைய தாயார் ஓய்வூதியம் பெறவில்லை. 1980 ம் ஆண்டு நான் ஒசூருக்கு வந்ததிலிருந்து என்னுடைய சொந்த வீட்டில்தான் வசித்து வருகிறேன் என்றால் சரிதான். எனக்கு ஓசூரில் ஒரு வீடும் 2 கடைகளும் உள்ளது. ஓசூரில் உள்ள எனக்கு உரிமைப்பட்ட வீட்டில் என்னுடைய ஆண் வாரிசுகள் வசித்து வருகின்றனர். அதில் நாங்கள் கூட்டுக் குடும்பமாக வசித்து வருகிறோம். 1978 ம் ஆண்டு ஓசூரில் உள்ள வீட்டை நான் கிரயம் பெற்றேன். பின்பு 1980 ம் ஆண்டு நாங்கள் வீடுகட்டி குடியேரினோம். எனக்கு அரசாங்கத்தால் வீடு வழங்கப்படும்போது எனக்கு ஓசூரில் உரிமைப்பட்ட வீடு உள்ளது என்ற விவரத்தினை மறைத்துதான் பெற்றேன் என்றால் சரியல்ல, எனக்கு அரசாங்கத்தால் வழங்கப்பட்ட வீடானது 1975 ம் ஆண்டு வழங்கப்பட்டது,

அப்போது எனக்கு சொந்தமாக வீடு இல்லை. நான் தனியார் நிறுவனத்தில் பணிபுரிந்தேன். என்னுடைய மனைவி வேலைக்கு செல்லவில்லை. அரசாங்கத்தால் நாகட்டப்பள்ளி கிராமத்தில் வழங்கப்பட்ட வீடானது என்னுடைய பெயரில் வழங்கப்படவில்லை என்றாலும் என்னுடைய தந்தையின் பெயரில் 1990 ம் ஆண்டுதான் வழங்கப்பட்டது என்றாலும் சரியல்ல. வழக்கு பட்டிகை சொத்திற்கான பட்டா 1 ம் பிரதிவாதியின் பெயரில்தான் உள்ளது. வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்புதான் 1 ம் பிரதிவாதி வழக்கு பட்டிகை சொத்து குறித்து பட்டா பெயர்மாற்றம் செய்து கொண்டார். தாவா சொத்து கிராம நத்தம் என்றுதான் வருவாய் ஆவணங்களில் குறிப்பிடப்பட்டுள்ளது. கிராம நத்தம் என்று வகைப்படுத்தப்பட்ட நிலத்தில் அந்த நிலத்தில் யார் கைவசம் வைத்து அனுபவித்து வருகிறார்களோ அவர்களின் பெயரில்தான் அரசாங்கத்தால் வழங்கப்படும் என்றால் அதைப்பற்றி எனக்கு தெரியாது. 1 ம் பிரதிவாதியின் தந்தையும் என்னுடைய தந்தையும் உடன் பிறந்த சகோதரர்கள் என்றால் சரிதான். என்னுடைய தந்தை உடன்பிறந்த 4 நபர்களும் உயிருடன் இல்லை என்றால் சரிதான், என்னுடைய தந்தையும் உயிருடன் இல்லை. எனக்கு நாகடப்பள்ளி கிராமத்தில் வேறு எந்த சொத்தும் இல்லை. நாகடப்பள்ளி கிராமத்தில் எனக்கு சொத்து கிடையாது. வா.சா.ஆ.1 முச்சலிக்கா எழுதப்பட்டபோது நான் அங்கு இல்லை. வா.சா.ஆ.1 முச்சலிக்க போலியாக தயார் செய்யப்பட்டு இவ்வழக்கில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. வா.சா.ஆ.1 பதிவு செய்யப்படாத ஆவணம் என்றால் சரிதான். என்னுடைய பெற்றோருக்கு நான் ஒரே மகன் என்றால் சரிதான். வா.சா.ஆ.2 உயிலின் சான்றிட்ட நகலின் அசல் என்னுடைய கைவசத்தில்தான் உள்ளது, அது தொலைந்துவிடக் கூடாது என்பதற்காக நகலினை மட்டும் வாதி தரப்பு சான்று ஆவணமாக இவ்வழக்கில் தாக்கல் செய்துள்ளேன். வா.சா.ஆ.2 உயில் ஆவணம் எங்கு வைத்து தயார் செய்யப்பட்டது என்ற விவரம்

எனக்கு தெரியாது. வா.சா.ஆ.2 உயில் ஆவணத்தின் அசலில் பக்கம் 1 பத்தி 3ல் கையால் எழுதப்பட்டு உள்ளது என்றால் சரிதான். அது சேர்க்கப்பட்டதற்கான கையொப்பம் இடப்படவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.2 உயில் ஆவணத்தில் ராஜப்பா மற்றும் ராமச்சந்திரப்பா ஆகியோர் சாட்சிகளாக கையொப்பமிட்டுள்ளனர். என்னுடைய மனைவியின் பெயர் மகாதேவம்மா ஆகும். ராமச்சந்திரப்பா மாசிநாயக்கனாப்பள்ளி ஊரைச் சேர்ந்தவராவார், ராஜப்பா இடையநல்லூரை சேர்ந்தவர். வா.சா.ஆ.2 உயில் ஆவணத்தினை யார் எழுதினார்கள் என்று ஆவணத்தை பார்த்துதான் சொல்லமுடியும். வா.சா.ஆ.2 உயில் ஆவணத்தில் ராமச்சந்திரப்பாவின் மனைவி ஜெயம்மாதான் சாட்சியாக கையொப்பம் இட்டுள்ளார் என்றால் சரியல்ல. என்னுடைய பெற்றோருக்கு நான் ஒரே மகனாக இருந்த காரணத்தினால் அவர்களின் காலத்திற்கு பிறகு அவர்களுக்கு உரிமைப்பட்ட சொத்து எனக்குதான் வந்திருக்கும், ஆகவே வா.சா.ஆ.2 உயில் ஆவணம் எழுதவேண்டிய அவசியம் இல்லை என்றால் சரியல்ல, என்னுடைய தந்தையின் சகோதரர்கள் சொத்தில் உரிமைகோர கூடாது என்பதற்காக வா.சா.ஆ.2 உயில் ஆவணம் எழுதப்பட்டது. வா.சா.ஆ.2 உயில் ஆவணம் எழுதப்பட்ட 1991ம் ஆண்டு வழக்கு பட்டிகை சொத்தில் உள்ள வீட்டில் 1ம் பிரதிவாதிதான் வசித்து வந்தார் என்றால் சரிதான். வா.சா.ஆ.2 உயில் ஆவணத்தில் கோபனப்பள்ளி, முதுகானப்பள்ளியில் உள்ள நிலங்கள் குறித்து, ஓசூரில் உள்ள வீடு குறித்தும் மற்றும் தாவா சொத்து குறித்தும் எழுதப்பட்டுள்ளது. வழக்கு பட்டிகை சொத்திற்கு 1991ம் ஆண்டு புல எண் 54 என்றுதான் கொடுக்கப்பட்டு இருந்தது. தற்பொழுது வழக்கு பட்டிகை சொத்தில் புல எண் என்ன என்று எனக்கு சரியாக தெரியாது, ஆனால் புல எண் 669 என்று கேள்விப்பட்டேன். எந்த ஆண்டு வழக்கு பட்டிகை சொத்தின் புல எண் மாற்றப்பட்டது என்ற விவரம் எனக்கு தெரியாது. வா.சா.ஆ.2 உயில் ஆவணத்தின் அசலில் பக்கம் 3ல் சொத்து விவரத்தில்

புல எண் குறித்து குறிப்பிடப்பட்டுள்ள இடத்தில் தட்டச்சு செய்யப்பட்டிருந்த இடத்தில் கையால் திருத்தி எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். யாரால் மேற்படி திருத்தம் செய்யப்பட்டது என்ற விவரம் எனக்கு தெரியாது. வா.சா.ஆ.2 உயில் ஆவணத்தில் மேற்படி திருத்தம் செய்ததை காண்பிப்பதற்கு கையொப்பம் இடவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.2 உயில் ஆவணத்தின் அசலில் திருத்தங்கள் செய்துள்ள விவரத்தினை நீதிமன்றத்தில் தெரியப்படுத்த கூடாது என்பதற்காகதான் வா.சா.ஆ.2 உயில் ஆவணத்தின் சான்றிட்ட நகலை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன் என்றாலும் சரியல்ல. வா.சா.ஆ.2 உயில் ஆவணத்தை வழக்கு பட்டிகை சொத்து குறித்து எழுத என்னுடைய தந்தைக்கு உரிமை இல்லை என்றாலும் அவ்வாறு எழுதி இருந்தாலும் வழக்கு பட்டிகை சொத்தில் எனக்கு உரிமை கிடையாது என்றாலும் சரியல்ல. ஓசூரில் உள்ள வீட்டினை நான் கிரயம் பெறும்போது என்னுடைய தந்தை குள்ளப்பாவின் பெயரில் வாங்கினேன். ஓசூரில் கிரயம் பெற்ற சொத்திற்கும் என்னுடைய சித்தப்பாவிற்கும் எந்த சம்மந்தமும் கிடையாது. உண்மையில் என்னுடைய தந்தை வா.சா.ஆ.2 உயில் ஆவணம் எழுதியிருந்தால் அதில் அவருக்கு மட்டும் உரிமைப்பட்ட ஓசூரில் உள்ள சொத்தை சேர்த்திருக்க வேண்டிய அவசியம் இல்லை. நாகடனப்பள்ளியில் அரசாங்கத்தால் வழங்கப்பட்ட நிலத்தில் நாங்கள் 5 வருடங்களுக்கு முன்பு வீடு கட்டியுள்ளோம். மேற்படி வீட்டினை கட்டுவதற்கு அரசாங்கத்தால் வீடில்லாதோருக்கு வீடு கட்ட வழங்கப்படும் மானியத்தை பெற்றுதான் கட்டினேன் என்றால் சரியல்ல, என்னுடைய சொந்த செலவில்தான் கட்டினேன்.

**1ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது.**

ஒம்/-வ.அகவிதன்,
**நீதித்துறை நடுவர் எண். 1**
**ஓசூர் கிருஷ்ணகிரி மாவட்டம்.**